DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 954/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 1(LW1)
Defence

Name : Sabareesan

Father Name /
Husband Name : Anbazhagan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 27th February 2026.

எதிரி ஆஜர்.

**முதண்மை விசாரணை**

நான் தற்போது கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 18.10.2025 அன்று கோட்டக்குப்பம ் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தேன் அன்றைய தினம் கோட்டக்குப்பம் மதுவிலக்கு

அமல்பிரிவு ஆய்வாளர் திருமதி.அறிவழகி அவர்களின் தலைமையில் அவர்களுடன் நானும் என்னுடன் த.கா.2562 நாகராஜ் ஆகியோர்களுடன் கீழபுத்துப்பட்டு சோதனைசாவடி அருகே வாகனத்தணிக்கை செய்துகொண்டிருந்தபோது டிஎன்.22.சிஆர்.0778 என்ற மகேந்திரா XUV கார் பாண்டியிலிருந்து சென்னை மார்க்கமாக வந்துகொண்டிருந்தது. நாங்கள் அந்த காரை நிறுத்தி விசாரணை செய்ய முற்பட்டபோது எங்களை தாண்டி செல்ல முற்பட்ட காரை மடக்கி பிடித்து விசாரித்தோம். மேற்படி காரை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி ஜெகதீசன் ஆவார். மேற்படி காரை ஆய்வாளர் சோதனைசெய்தபோது அந்த காரில் Jeffries Brandy 180ml- 3 box(3x48= 144NOs), Kingfisher tinbeer 500ml – 27Nos, Heinken Beer 500 ml – 3Nos, Tuborg Beer 500ml-10Nos, Mansionhouse 750 ml- 6Nos, Mcdowells 750ml- 1Nos, Imperial bluse whiskey 750ml- 4Nos, Bacardi 750ml – 2Nos, Bacardi Rum 750ml- 1Nos, Mens Black 750ml -4NOs, Crystal red wine 750ml- 1NOs, Siganture 750ml- 1, Black and gold VSOP 750ml- 1NOs, Old Monk 750ml- 1Nos, Black Brandy 180ml- 15NOs, Pondy milly 500ml- 4NOs, ஆகிய வெளிமாநில மதுபாட்டில்களை வைத்திருந்ததாக ஆய்வாளர் ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்து எங்கள் முன்னிலையில் மேற்படி மதுபாட்டில்கள் மற்றும ்மேற்படி காரை அன்றைய தினம் 14.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். ்கைப்பற்றுதல் மகசரில் நானும் தகா.நாகராஜீம் சாட்சி கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளின் கையொப்பம் என்ற பகுதியில் என் கையொப்பம் முதலாவதாக உள்ளது. நாகராஜீன் கையொப்பம் இரண்டாவதாக உள்ளது. **மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களின் புகைப்படம் அசா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட மேற்படி காரின் புகைப்படம் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் ஆஜர் எதிரி மற்றும் வழக்கின் சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.503/2025 அதன் பிரிவுகள் 4(1)(C), 4(1)(A), 14(A) TNP Act

ன்கீழ முதல் தகவல ்அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த இடத்தில் வாகன தணிக்கையில் ஈடுபட்டோம் என்று குறிபபிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பாண்டி டு சென்னை ஈசிஆர் சாலையில போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும ்என்றால் சரிதான். யார் வாகனத்தை நிறுத்தினார்கள என்று எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரியை எவ்வாறு எனக்கு தெரியும் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனத்தை நிறுத்தியபோது நிறுத்தாமல் சென்றவரை யார் சென்று மடக்கி பிடித்தோம் எனறு ஆய்வளார் விசாரணையின் போது நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை கைப்பற்றியபோது யார் சோதனை செய்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையின்போது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எத்தனை மணிக்கு வாகன தணிக்கை செய்ததாக ஆய்வாளர் விசாரணையின்போது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்று எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் எந்த இடத்தில் தயார் செய்யப்பட்டது என்று அந்த மகசரில் இடம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

அசா.ஆ.2 புகைப்படம் சம்பவ இடத்தில் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் அந்நிய சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் நான் எந்த வாகன தணிக்கையும் செய்யவில்லை என்றாலும் மேல்அதிகாரியின் உத்தரவிற்கு இணங்க அரசாங்க புள்ளிவிவரத்திற்காக ஆய்வாளர் கேட்டு கொண்டதன் பேரில் தவறாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் ்அறிக்கைக்கு

அனுசரணையாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்)/- என்.பிரீத்தி,
நீதித்துறை நடுவர்,
வானூர்.